# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.13/2017

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 13 –ம் நாள் பிரதிவாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 13.03.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராமலிங்கம் (DW–1 ) | வயது | : | 51 /2025 |
| த/க பெயர் | : | திரு. செல்லம்பிராசு | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | எடமேலையூர் | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) தாவா சொத்து அமைந்துள்ள இடம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இரண்டு புல எண்கள் 562/2B, 562/10 புல எண்களுக்காக தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு வடக்கு புறமும், மேற்கு புறமும் எனது தகப்பனாருக்கு சொந்தமான சொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு கீழ்புறத்தில் தென்வடலாக வாய்க்கால் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தென்புறத்தில் வாதிக்கு சொந்தமான நிலம் உள்ளது என்றால் சரிதான்.
2) எனது நிரூபண வாக்குமூலத்தில் 1997 ம் ஆண்டு OS.No.223/1997 சார்பு நீதிமன்றம், நாகப்பட்டிணத்தில் மற்றும் இந்நீதிமன்றத்தில் OS.No.147/1999 வழக்கு நடந்ததாக சொல்லியுள்ளதால் மேற்கண்ட இரண்டு வழக்கிலும் வாதியோ வாதியின் கணவரோ தரப்பினர்கள் இல்லை என்றால் சரிதான். மேற்கண்ட இரண்டு வழக்கிலும் சர்வே எண்.560/1, 560/2 என்றால் சரிதான். தாவா சொத்தும் மேற்கண்ட இரண்டு வழக்கின் சொத்துக்களுக்கும் எந்த வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்கண்ட இரண்டு வழக்குகளும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான்.

3) இந்த வழக்கில் எங்களுக்கு எதிராக தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டு இந்நீதிமன்றம் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியதை எதிர்த்து நாங்கள் மேல்முறையீடு செய்து அது மன்னார்குடி சார்பு நீதிமன்றத்தில் CMA.No.2/2020 தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் யார் பெயரில் உள்ளது என்றால் எனது அப்பா பெயரில் உள்ளது. அதற்கான ஆவணம் தான் பி.சா.ஆ.1 என்றால் சரிதான். பி.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விபரம் 560/1, 560/1B என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) தாவா சொத்தும் பி.சா.ஆ-1 ஆவணத்தில் உள்ள சொத்தும் வெவ்வேறானது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனக்கும் எனது தகப்பனாருக்கும் பாத்தியம் இருப்பதாக சொல்லி வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு அருகில் எனது நிலம் இருப்பதால் தாவா சொத்தை அபகரிக்க பிரச்சனை செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணப்படி 18.06.2008 இல் தாவா சொத்தை வாதி கிரயம் வாங்கினார் என்றால் சரிதான். வா.சா.ஆ-1 ஆவணம் செல்லாது என்று நானோ எனது தகப்பனாரோ வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து வாதிக்கு சொந்தம் என்பதாலும் , தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் இருப்பதால் தான் வா.சா.ஆ.1 ஆவணம் செல்லாது என்று வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

5) இந்த வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரத்தை எதிர்த்து சார்பு நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்ட உத்தரவை எதிர்த்து மேல்முறையீடு செய்யவில்லை என்றால் சரிதான். ஏற்கனவே தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் இருப்பதை நீதிமன்றம் உறுதி செய்துதான் தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு ஆதரவாக வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நாங்கள் விவசாயம் செய்து வருகிறோம் என்பதை காட்டுவதற்கான ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வழக்கு நடப்பதால் கிராம நிர்வாக அலுவலர் சான்று கொடுக்கமுடியாது என்று சொல்லிவிட்டார்.

6) தாவா சொத்து எனக்கு சொந்தமும் இல்லை, எங்கள் அனுபவத்திலும் இல்லை என்றும் தாவா சொத்து எங்கள் அனுபவத்தில் இருப்பதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.20 10:23:14 +0530

District Munsif
Mannargudi.